# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 01.02.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் கடந்த ஜுமுஆவிற்கு முந்தைய ஜுமுஆவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பிறந்தநாள் தொடர்பாகக் கூறினேன். அன்று ரபியுல் அவ்வல் 12-ம் தேதியாக இருந்தது. பாகிஸ்தானில் மீலாது நபி விழாவின் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெறுகின்றன எனக் கூறினேன். அதில், முந்தைய அனுபவத்திற்கேற்ப பாகிஸ்தானில், குறிப்பாக ரப்வாவில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வரலாறு மற்றும் நேசத்தைப் பற்றி குறைத்துப் பேசவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு எதிராக தவறாகவும், மோசமாகவும் பேசுவதற்கும் வாய்ப்பு உள்ளது எனக் கூறினேன். அந்த வகையில் எனக்கு வந்துள்ள அறிக்கையின்படி அதே தான் நடந்துள்ளது. ரப்வாவின் தெருக்களில் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது; ஏசிப் பேசப்பட்டுள்ளது. அவர்களுக்கு எல்லாவற்றையும் கூறுவதற்கு சுதந்திரம் உள்ளது. ஆனால் அஹ்மதிகளுக்கு, அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரைக் கூறுவதற்குக் கூட சுதந்திரம் இல்லை.

எவ்வாறாயினும், இது தீய ஆலிம்களின் வேலையாகும். அல்லாஹ் சமுதாயத்தின் மீது கருணை புரிவானாக! இது இந்த பெயர் தாங்கி ஆலிம்களின் பணியாகும். அவர்கள் ஏசிப்பேசிக் கொண்டே இருப்பார்கள். இவர்களின் ஏச்சுப் பேச்சு அல்லது தடைகளை ஏற்படுத்துவது போன்றவை ஜமாஅத்தின் முன்னேற்றத்தில எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. மாறாக, ஒவ்வொரு எதிர்ப்பும் ஜமாஅத்தின் பாதத்தை முன்பை விட அதிகமாக முன்னேறச் செய்கிறது.

தற்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சில மேற்கோள்களை உங்கள் முன் எடுத்துரைப்பேன். இதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது அந்தஸ்து மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தலைவர் மீது கொண்டிருந்த நேசம் மற்றும் ரோசத்தைப் பற்றி தெரிய வரும். அதன் முன்னுதாரணமும் கிடைக்கும். ஒருபுறம் இந்த எதிரிகள் நம்மை ஏசிப்பேசுகின்றனர். மறுபுறம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மேன்மையை எவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள் (என்று பாருங்கள்).

அனைத்து நபிமார்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மேன்மையை **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மை என்னவென்றால், அவர்கள் அனைத்து நபிமார்களையும் விட சிறந்த நபி ஆவார்கள். அவர்கள் உலகின் மாபெரும் சீர்திருத்தவாதி ஆவார்கள். அதாவது அந்த மனிதரின் கையினால் தான் உலகம் மாபெரும் குழப்பத்திலிருந்து சீர்திருத்தம் அடைந்தது. அவர்கள் மறைந்துபோன, தொலைந்து போன தவ்ஹீதை மீண்டும் பூமியில் நிலைநாட்டினார்கள். அவர்கள் அனைத்து பொய் மதங்களையும் ஆதாரங்கள் மூலம் வென்று எல்லா விதமான வழிகேடின் சந்தேகங்களையும் அகற்றினார்கள். அவர்கள், மறுக்கின்ற ஒவ்வொருவரின் சந்தேகங்களையும் அகற்றினார்கள். இரட்சிப்பிற்கான சரியான வழியினை, உண்மையினைப் பெறும் வழியை மீண்டும் புதிதாக வழங்கினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

இந்த ஆதாரங்கள் மூலம் இவரது பயன் மற்றும் நன்மை எல்லாரையும் விட அதிகமாகும் என்பது நிரூபிக்கப்படுகிறது. இவரது தரமும் கண்ணியமும் எல்லாரையும் விட அதிகமாகும். இப்போது வரலாறு சான்று பகர்கின்றது. விண்ணின் வேதமும் சான்று பகர்கின்றது. எவருக்கெல்லாம் கண்கள் உள்ளனவோ அவர்கள் பார்ப்பார்கள். இந்த விதியின்படி அனைத்து நபிமார்களையும் விட ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே மேலானவர்கள் ஆவார்கள் என்பது நிரூபணம் ஆகிறது. (ஆதாரம் : பராஹீனே அஹ்மதிய்யா)

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கத்தின் மேன்மை மற்றும் மகத்துவத்தை எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மூஸா இரக்கம் மற்றும் தயவில் பனீஇஸ்ராயீலின் அனைத்து நபிமார்களையும் மிஞ்சி விட்டார்கள். பனீ இஸ்ராயீலின் மஸீஹாலோ அல்லது வெறெந்த நபியினாலோ ஹஸ்ரத் மூஸாவுடைய உயர்வு வரை செல்ல முடியவில்லை. ஹஸ்ரத் மூஸா இரக்கம், தயவு மற்றும் நல்லொழுக்கத்தில் பனீ இஸ்ராயீலுடைய அனைத்து நபிமார்களை விடவும் சிறந்தவராகவும் முதன்மையானவராகவும் இருந்தார் என்பது தவ்ராத் மூலம் நிரூபணமாகிறது. தவ்ராத்தில் எண்ணாகமத்தில் 12ம் அதிகாரம் 3வது வசனத்தில் வருகிறது. மூஸா பூமியிலிருந்த அனைவரை விடவும் அதிக இரக்கமுடையவராக இருந்தார். அதனால் இறைவன் தவ்ராத்தில் மூஸாவுடைய இரக்கத்தைப் பற்றி எந்த அளவு புகழ்ந்துள்ளான் என்றால் இதனைப்போன்று வார்த்தையை இறைவன் பனீ இஸ்ராயீலுடைய வேறெந்த நபிக்கும் பயன்படுத்தவில்லை.

ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சிறந்த நல்லொழுக்கம் பற்றி திருக்குர்ஆனில் வந்துள்ளது. அது ஹஸ்ரத் மூஸாவைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகும். ஏனென்றால் அல்லாஹ் கூறியுள்ளான்: ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் நபிமார்களிடம் தனித்தனியாக காணப்பட்ட அனைத்து நல்லொழுக்கத்தின் தொகுப்பு ஆவார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களைப் பற்றி, இன்னக்க அலா குலுக்கின் அஸீம் – நீர் உயர்ந்த நல்லொழுக்கத்தில் இருக்கின்றீர். அஸீம் என்ற வார்த்தையுடன் எதனையாவது புகழ்ந்தோம் என்றால், அது அரபு நாட்டின் வழக்கத்தின் படி அந்த பொருளின் உச்சகட்ட மேன்மையினை சுட்டிக் காட்டுகின்றது என்பதாகும். உதாரணமாக, இந்த மரம் அஸீம் என்று கூறினால் இதன் பொருள், எந்த அளவு ஒரு மரத்தின் அகலமும் உயரமும் சாத்தியப்படுமோ அவை அனைத்தும் இந்த மரத்திற்கு உள்ளது என்று அர்த்தம். இதனைப் போன்றே இந்த வசனத்தின் பொருளும் ஆகும். அதாவது எந்த அளவு மனிதனால் நல்லொழுக்கத்தை மேற்கொள்ள முடியுமோ மேலும் நன்மை செய்ய முடியுமோ அந்த அனைத்து முழுமையான நல்லொழுக்கமும் முஹம்மதின் நஃப்ஸில் இருக்கின்றது. எனவே இந்த புகழ்ச்சி எவ்வளவு உயர்ந்ததாக உள்ளதென்றால் இதனை விட (சிறந்ததாக) வேறெதனையும் கூறுவது உகந்ததல்ல.

இதனைப்போன்றே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி வேறோரிடத்திலும் கூறியுள்ளான். வகான ஃபஸ்லுல்லாஹி அலைக்க அஸீமா – அதாவது உம் மீது தான் இறைவனது அதிகமான அருள் உள்ளது. வேறெந்த நபியும் உமது தரத்தை அடைய முடியாது. இதே புகழ்ச்சி முன்னறிவிப்பாக கூறப்பட்டுள்ளது. அதில் இறைவனாகிய உம்முடைய இறைவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிசேகம் பண்ணினான்.(சங்கீதம் அதிகாரம் 45) இதுவும் பராஹீனே அஹ்மதிய்யாவின் மேற்கோளாகும்.

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்த உயர்வான ஒளியைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஸய்யதுனா **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுக்கு அருளப்பெற்ற – அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல், ஆறு இவைகளிலுமில்லை. அது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றுள்ளும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம், அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும, தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்.

எனவே அவ்வொளி அந்த மனிதருக்கு கொடுக்கப்பட்டது. பின்னர் அவரின் குணயியல்புகளைச் சிறிதேனும் கொண்டவர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும், நம் தலைவரும், நம் அன்புக்குரியவரும், நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையானர் என உறுதிசெய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது.

**இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*நீர் (அவர்களிடம்) கூறுவீராக! என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியன. (6:163)*

*அவனுக்கு இணையே இல்லை. இவ்வாறே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பட்டு நடப்பவர்களில் நானே முதல்வன். (6:164)*

*நிச்சயமாக இது எனது நேரான வழியாகும்.எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். பின்பற்றுங்கள். (ஏனைய) வழிகளைப் பின்பற்றாதீர்கள்... (6:154)*

*நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான். (3:32)*

*நீர் (அவர்களிடம்) நான் முற்றிலும் அல்லாஹ்வுக்கு அடி பணிந்து விட்டேன்... (3:21)*

*...அனைத்து உலகங்களின் இறைவனுக்கே நான் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். (40:67)*

அதாவது, அவர்களிடம் கூறுவீராக! எனது தொழுகை, எனது வணக்கங்கள் எனது முயற்சிகள், எனது தியாகங்கள், நான் உயிருடன் இருப்பதும் மரணிப்பதும் ஆகிய அனைத்தும் இறைவனுக்காகவும் அவரது வழியிலுமே ஆகும். அவனே அனைத்து உலகத்தின் ரப் ஆவான். அவனுக்கு இணை யாருமில்லை. நான் கட்டுப்படுபவர்களில் முதன்மையானவன் ஆவேன் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

அதாவது உலகின் ஆரம்பத்திலிருந்து அதன் இறுதி வரை என்னைப் போன்று இந்த அளவு இறைவனுள் தன்னை மாய்த்துக் கொள்ளக்கூடிய வேறெந்த முழுமையான மனிதரும் கிடையாது. மேலும் இறைவனது அனைத்து அமானத்துகளையும் திரும்பக் கொடுக்கக்கூடியவர் எவரும் இல்லை. இறைவனது அனைத்து அமானத்துகளை திரும்ப ஒப்படைக்கக்கூடியவர் என்பதன் பொருள், அல்லாஹ் மனிதன் மீது எந்த அளவு வேலைகள் செய்வதற்கான பொறுப்பை சுமத்தியுள்ளானோ மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு கடமைகளும் பொறுப்புகளும் இருந்தனவோ அதனை செய்வதில் உள்ள உச்சத்தை அன்னார் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் நமது நபி (ஸல்) அவர்களின் மேன்மை ஏனைய நபிமார்களின் மீது முழுமையாக நிரூபணமாகவில்லை என்ற கொள்கையை உடைய நிராகரிக்கக்கூடிய அந்த அறவீனர்களுக்கு இதில் மறுப்பு உள்ளது. மேலும் பலவீனமான ஹதீஸ்களை வைத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு யூனுஸ் பின் மத்தாவை விட மேன்மையை வழங்காதீர்கள் என தடை செய்துள்ளார்களே என்கின்றனர். இந்த அறிவிலிகள் அறிவதில்லை. இந்த ஹதீஸ் சரியா இல்லையா என்பது தெரியாது. ஒருவேளை சரி என்று ஏற்றுக் கொண்டாலும் அது தாழ்மை மற்றும் தன்னடக்கம் ஆகும். அது எப்போதும் நமது தலைவர் (ஸல்) அவர்களுடைய வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு விசயத்திற்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை என்று ஒன்று இருக்கிறது.

ஒரு நல்லவர் தன்னைப் பற்றி தாழ்மையான இறைஅடியான் என எழுதியிருந்தால் அதற்கு அந்த மனிதர் அனைத்து உலகிலும் சிலை வணங்கிகளை விடவும், குழப்பவாதிகளை விடவும் மோசமானவர் என்று பொருளல்ல. மேலும் அவரே தன்னை தாழ்மையான இறை அடியான் என ஒப்புக்கொண்டுள்ளார் என கூறினால், அது எந்த அளவு அறியாமை மற்றும் நஃப்ஸின் தீங்கு ஆகும். கவனத்துடன் பார்க்க வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது பெயரை அவ்வலுல் முஸ்லிமீன் – முதன்மையான முஸ்லிம் என வைத்துள்ளான். பின்பற்றக்கூடியவர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவருக்கும் தலைவராக ஆக்கியுள்ளான். அனைவரையும் விட முதன்மையாக அமானத்தைத் திருப்பிக் கொடுப்பவராக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஆக்கியுள்ளான். இதன் பிறகு திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளக் கூடியவர் எவருக்காவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர்வான மகத்துவத்தின் மீது குறை கூறுவதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கின்றதா?

இறைவன் மேற்குறிப்பிட்ட வசனங்களில் இஸ்லாத்திற்குப் பல்வேறு படித்தரங்களை வைத்து அனைத்து படித்தரங்களை விட உயர்வான படித்தரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இயல்புக்கு வழங்கிய படித்தரத்தையே ஆக்கியுள்ளான்.

ஒரு பார்ஸி கவிதையில் கூறுகின்றார்கள்: மூஸாவும் ஈஸாவும் உமது கூட்டத்தைச் சார்ந்தவர்களே. அனைவரும் இந்த பாதையில் உமது அருளால் தான் வந்துள்ளனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மீதமுள்ளதன் மொழியாக்கம் இதுவாகும். அதாவது, அல்லாஹ் தனது ரஸூலிடம் கூறுகின்றான். நீர் கூறுவீராக! எனது வழியே நேரானதாகும். எனவே நீங்கள் அதனைப் பின்பற்றுங்கள். பிற வழிகளில் செல்லாதீர்கள். அவை இறைவனிடமிருந்து உங்களை விலக்கி விடும். அவர்களிடம் கூறுவீராக! நீங்கள் இறைவன் மீது நேசம் கொள்கின்றீர்கள் என்றால், வாருங்கள்! என்னைப் பின்பற்றுங்கள். அதாவது எனது வழியில் செல்லுங்கள். இஸ்லாத்தின் உயர்வான உண்மையின் படி நடங்கள். அப்போதுதான் இறைவன் உங்களையும் நேசிப்பான். உங்களது பாவங்களை மன்னிப்பான்.

அவர்களிடம் கூறுவீராக! எனது வழி இதுவாகும். அதாவது எனது அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் என்னை நான் ரப்புல் ஆலமீனுக்காக ஆக்கிக் கொள்ள வேண்டும் என எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்பதாகும். அதாவது எவ்வாறு அவன் ரப்புல் ஆலமீனாக இருக்கின்றானோ அவ்வாறு நான் காத்தமுல் ஆலமீன் ஆக வேண்டும். மேலும் அவனிடம் என்னை மாய்த்துக் கொள்ள வேண்டும். அதாவது நான் உலகங்களின் சேவகன் ஆக வேண்டும். அவனுக்காகவும் அவனது வழிக்காகவும் ஆக வேண்டும். ஆக, என்னையும் என்னிடமிருந்த அனைத்தையும் அல்லாஹ்வுக்கு கொடுத்து விட்டேன். இப்போது என்னிடம் எதுவுமில்லை. என்னிடம் உள்ளதெல்லாம் அவனுடையதாகும். (ஆதாரம் : ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம்)

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து ஆகும். மேலும் அந்த முன்மாதிரியைத் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள். நமது எதிரிகளிடம் இந்த முன்மாதிரி இருக்கிறதா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அருள்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் கலிமா கூறக்கூடியவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடியவர்கள் ஆவார்கள்.

பிறகு அன்னாருடைய அருள் மற்றும் நுபுவ்வத்துடைய விரிவை எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மூஸா, ஈஸா மற்றும் நபி (ஸல்) அவர்களுடைய இறைவன் ஒருவனே ஆவான். மூன்று இறைவன் கிடையாது. ஆனால் பல்வேறு வெளிப்பாடுகளின் அடிப்படையில் அந்த ஓர் இறைவனிடமிருந்து மூன்று சிறப்பு அம்சங்கள் வெளிப்பட்டன. ஏனென்றால், மூஸாவுடைய பணி பனீ இஸ்ராயீல் மற்றும் ஃபிர்அவ்ன் வரை எல்லைக்குட்பட்டதாக இருந்தது. அதனால் மூஸா மீது இறைவனின் வல்லமையின் வெளிப்பாடு அந்த அளவுக்கு தான் குறுகியதாக இருந்தது. மூஸாவின் பார்வை அந்தக் காலம் மற்றும் வருங்காலத்தில் வரக்கூடிய ஆதமுடைய சந்ததிகளுக்காக இருந்தது என்றால் தவ்ராத்துடைய போதனைகள் தற்போது இருப்பதைப் போன்று வரம்புக்குட்பட்டதாகவும், குறைபாடுகளைக் கொண்டதாகவும் இருந்திருக்காது.

இதனைப்போன்றே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய பணி யூதர்களின் ஒரு சில பிரிவுகள் வரை மட்டுமே குறுகியதக இருந்தது. அது அவர்கள் முன்பாக இருந்த மக்களுக்காக மட்டுமே இருந்தது. மற்ற சமுதாயங்கள் மற்றும் வருங்காலத்துடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. இதனால் தான் இறை வல்லமையின் வெளிப்பாடு அவர்களது மதத்தில் அவர்களது பணியின் அளவுக்கு வெளிப்பட்டது. மேலும் வருங்காலத்தில் இல்ஹாம் மற்றும் இறை வஹியின் மீது முத்திரையிடப்பட்டிருந்தது. இங்கு இடப்பட்ட முத்திரை இனிமேல் வஹி இறங்காது என்ற முத்திரை ஆகும்.

மேலும் இஞ்சீலுடைய போதனையும் யூதர்களுடைய செயல்பாடு மற்றும் ஒழுக்க சீர்கேட்டின் சீர்திருத்தத்திற்கு மட்டுமே இருந்தது. அனைத்து உலகின் குழப்பத்தின் மீது பார்வை இருக்கவில்லை. அதனால்

இஞ்சீலும் பொதுவான சீர்திருத்தத்தைச் செய்ய முடியாமல் போனது. அது கண்களுக்கு முன்னால் இருந்த யூதர்களிடம் காணப்பட்ட தீய நடத்தைகளை சீர்திருத்தியது. ஏனைய நாடுகளில் வசிக்கக்கூடியவர்கள் அல்லது வருங்காலத்தில் வரக்கூடிய மக்களைப் பற்றி இஞ்சீலுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. இஞ்சீலுக்கு அனைத்து பிரிவினர்கள் மற்றும் பல்வேறு மட்டங்களிலுள்ளவர்களின் சீர்திருத்தம் முன்னால் இருந்திருந்தால் தற்போது கொண்டிருக்கக்கூடிய போதனைகளை அது கொண்டிருக்காது. ஆனால் வருத்தம் என்னவென்றால், ஒருபுறம் இஞ்சீலுடைய போதனையும் முழுமையற்றதாக இருந்தது. மேலும் சுய ஆராய்வு மற்றும் தவறுகளே பல இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் ஒரு பலவீனமான மனிதன் இறைவன் ஆக்கப்பட்டார். பரிகாரம் என்ற சுயமாக உருவாக்கப்பட்ட கொள்கையை எடுத்து வைத்து செயல்ரீதியான சீர்திருத்தத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விட்டன.

தற்போது கிறிஸ்தவ சமுதாயம் இரண்டு விதமான துரதிஷ்டத்தில் மூழ்கியுள்ளது. ஒன்று, இறைவனிடமிருந்து நேரடியாக எந்த விதமான வஹியும், உதவியும் கிடைக்கப் பெறாது. ஏனென்றால் இல்ஹாம் மீது முத்திரையிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, செயல்ரீதியாக முன்னேறவும் முடியாது. ஏனென்றால், பரிகாரம் என்ற கொள்கை, முயற்சி உழைப்பு போன்றவற்றை தடுத்து விட்டது.

ஆனால் எந்த முழுமையான மனிதனின் மீது திருக்குர்ஆன் இறங்கியதோ அவருடைய பார்வை எல்லைக்குட்பட்டதாக இருக்கவில்லை. அவருடைய அனுதாபத்திலும் அரவணைப்பிலும் எந்தக் குறைவும் இருக்கவில்லை. மாறாக காலத்தின் அடிப்படையிலும் இடத்தின் அடிப்படையிலும் அவரது உள்ளத்தில் முழுமையான அனுதாபம் இருந்தது. அதனால் வல்லமையின் வெளிப்பாட்டின் முழுமையான நிறைவான பகுதி அவருக்கு கிடைத்தது. அவர் காத்தமுல் அன்பியாவானார். இனிமேல் இவர் மூலம் எவருக்கும் ஆன்மீக பலன் கிடைக்காது என்ற அர்த்தத்தில் அவர் அவ்வாறு ஆகவில்லை. மாறாக அவர் காத்தம் ஆவார் என்ற அடிப்படையில், அவரது முத்திரை இல்லாமல் எவருக்கும் பலன் கிடைக்கப் பெறாது. அவருடைய உம்மத்திற்கு கியாமத் வரை இறைவனுடன் பேசுவது மற்றும் சந்திப்பின் வாசல்கள் ஒருபோதும் அடைக்கப் பெறமாட்டாது என்பதாகும்.

மேலும் அவரைத் தவிர வேறு எவரும் முத்திரையுடையவர் கிடையாது. அவரது முத்திரையின் மூலம் நபித்துவமும் கிடைக்கப் பெறும். அதற்கு அவருடைய உம்மத்தைச் சேர்ந்தவராக இருப்பது அவசியமாகும். மேலும் அவருடைய தைரியமும், அனுதாபமும் உம்மத்தை அரைகுறையான நிலையில் விட்டு விட விரும்பவில்லை. அவர்களின் மீது இறைஞானம் பெறுவதற்குரிய அசல் ஆணி வேராகிய வஹியின் வாசல்கள் அடைப்பட்டுக் கிடப்பதை விரும்பவில்லை. தனது தூதுத்துவத்தின் சிறப்பின் அடையாளத்திற்காக இதனை விரும்பினார். அதாவது வஹியின் பயன் அன்னாரைப் பின்பற்றுவதன் மூலமாக கிடைக்கப்பெறும். எவர் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க மாட்டாரோ அவர் மீது இறைவஹியின் வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கும். ஆக, இந்த அர்த்தத்தில் தான் இறைவன் அன்னாரை காத்தமுல் அன்பியாவாக ஆக்கினான். இந்த வகையில் கியாமத் வரை இந்த விசயம் நிலைபெற்றது. அதாவது எவர் ஒருவர் உண்மையான பின்பற்றுதல் மூலம் தன்னை இந்த உம்மத்தைச் சேர்ந்தவர் என்று நிருபிக்கமாட்டாரோ மேலும் அன்னாரை பின்பற்றுவதில் தனது அனைத்து நிலையையும் அர்ப்பணிக்க மாட்டாரோ அப்படிப்பட்ட மனிதன் கியாமத் வரை எந்த விதமான முழுமையான வஹியையும் பெறமாட்டார். மேலும் முழுமையான முல்ஹிம் என்றும் அழைக்கப்பட மாட்டார். ஏனென்றால் நிரந்தரமான நுபுவ்வத் நபி (ஸல்) அவர்கள் மீது முற்றுப் பெற்று விட்டது. ஆனால் நிழல் வடிவிலான நுபுவ்வத் ஆகிய முஹம்மதுடைய பலன் மூலம் வஹி பெறுவது என்பது கியாமத் வரை எஞ்சியிருக்கும். ஏனென்றால் இதன் மூலம் மனிதன் முழுமை அடைவதற்கான வாசல் அடைக்கப்பட்டு விடக்கூடாது. மேலும் இந்த அடையாளமும் அழிந்து போகக் கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தைரியம் கியாமத் வரை இதனைத்தான் விரும்பியது. அதாவது இறைவனைச் சந்திப்பது மற்றும் பேசுவதன் வாசல்கள் நிறைந்திருக்க வேண்டும். இரட்சிப்பின் வழியாகிய இறைஞானம் மறைந்து போய்விடக் கூடாது. மேலும் எந்தவொரு சாலிஹான ஹதீஸிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு உம்மத்தியல்லாமல் அதாவது அன்னாரின் அருளிலிருந்து பலன்பெறாமல் நபி வர முடியும் என காணப்படுவதில்லை. (ஆதாரம் : ஹகீகத்துல் வஹி)

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய துஆ மற்றும் தர்பிய்யத்தின் காரணமாக ஏற்பட்ட சஹாபாக்களின் அந்தஸ்தின் உயர்வைப் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களின் உள்ளத்தில் இறைநேசத்தின் எழுச்சி ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய கவனம் அவர்களின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இறை வழியில் தமது தலையை ஆடுகளைப் போன்று வெட்டப்படுவதற்கு முன்வைத்தார்கள். எவராவது முந்தைய சமுதாயத்தில் இவ்வாறு காண்பிக்க முடியுமா? அல்லது அவர்களும் உண்மை மற்றும் விசுவாசத்தைக் காட்டினார்கள் என அடையாளம் காட்ட முடியுமா?

அன்னார், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய உதாரணத்தைக் கூறினார்கள். அவரது சமுதாயத்தில் இவ்வாறு தென்படவில்லை. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரி உடைய சஹாபாக்களின் நிலையைக் கூறினார்கள். எந்த அளவு சீடர்கள் இருந்தார்களோ அவர்கள் துன்பத்தைக் கண்டு ஓடிவிட்டனர். ஒருவர் கூட உறுதியாக நிலைநிற்க வில்லை. உறுதிப்பாட்டை கையாளவில்லை. கோழைத்தனம் அவர்களை வென்றது. ஆனால் நமது நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள், வாளின் நிழலின் கீழ் எந்த அளவு உறுதியாக நிலைநின்றார்கள் என்றால், மேலும் மரணிப்பதற்கு எந்த அளவு விரும்பினார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை படிக்கும் போது அழுகை வருகிறது. எனவே எது இப்படிப்பட்ட நேசத்தின் ரூஹை அவர்களது உள்ளத்தில் ஊதியது? மேலும் எந்த கை இவர்களை இந்த அளவுக்கு மாற்றியது? ஒன்று, அறிவீனமான காலத்தில் அவர்கள் உலகின் புழுக்களாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து வெளிப்படாத எந்த தீமையும் அநீதியும் இல்லை. ஆனால் இந்த நபியைப் பின்பற்றியதன் பிறகு இறைவன் புறம் எவ்வாறு இழுக்கப்பட்டார்கள் என்றால் இறைவன் அவர்களது உள்ளத்தில் நிலைநின்று விட்டான் போலும்!

நான் உண்மையாகவே கூறுகின்றேன். அந்த நபியின் தூய கவனம் தான் அந்த மனிதர்களை இழிவான வாழ்க்கையிலிருந்து ஒரு தூய வாழ்வின் பக்கம் இழுத்து வந்தது. கூட்டம் கூட்டமாக மக்கள் இஸ்லாத்தில் இணைவதற்கு காரணம் வாள் கிடையாது. அது அந்த 13 வருடகால மன்றாடலின், துஆவின், அழுகையின் விளைவாகும். இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் செய்து வந்தார்கள். மக்காவின் பூமி சாட்சி கூறியது. நான் இந்த அருளுக்குரிய பாதத்தின் கீழ் உள்ளேன். அவருடைய உள்ளம் ஏகத்துவத்தைப் பற்றி எந்த அளவு கூச்சலிட்டதென்றால் வானம் அவரது வேண்டுதல்களால் நிரம்பி விட்டது. இறைவன் தேவைகளற்றவன் ஆவான். அவனுக்கு எந்த விதமான வழிகாட்டல் பற்றியும் வழிகெடுத்தல் பற்றியும் எந்தக் கவலையும் கிடையாது. யாராவது நேர்வழி பெற்றாலோ, வழிதவறிச் சென்றாலோ அவனுக்கு இதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. ஆக, அரபு நாட்டில் வழக்கத்திற்கு மாற்றமாக தோன்றிய இந்த நேர்வழியின் ஒளி, பிறகு உலகம் முழுவதும் பரவியது. இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உள வேதனையின் விளைவாகும். உலகம் நேர்வழியினைப் பெற வேண்டும் என்பது அன்னாரின் துஆ ஆகும். இது அன்னாரின் நெஞ்சத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒவ்வொரு சமுதாயமும் ஏகத்துவத்திலிருந்து தூரம் விலகி மறைந்து விட்டது. ஆனால் இஸ்லாத்தில் ஏகத்துவத்தின் ஊற்று நிலைபெற்றிருக்கிறது. இந்த அனைத்து அருள்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது துஆவின் விளைவுகளே ஆகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்ற வேதனையினால் நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா?

ஆக முந்தைய நபிமார்களின் உம்மத்தில் இந்த அளவு சீர்திருத்தமும், இறையச்சமும் ஏற்படவில்லை. அதற்கு இதுதான் காரணமாகும். அதாவது உம்மத்திற்காக இந்த அளவு கவனமும் உள வேதனையும் அந்த நபிமார்களிடம் இருக்கவில்லை. அந்தோ! இன்றைய முஸ்லிம் அறிவிலிகள் தனது கண்ணியத்திற்குரிய இந்த நபியை சற்றும் மதிக்கவில்லை. ஒவ்வொரு விசயத்திலும் தடுமாற்றம் கண்டார்கள். அவர்கள் கத்மே நுபுவ்வத்திற்கு

எவ்வாறு பொருள் தருகின்றார்கள் என்றால், அதன் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு கண்ணியக்குறைவு ஏற்படுகிறது; புகழ் ஏற்படுவதில்லை. இந்த வகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) தூய உள்ளத்தில் பலன்தரக்கூடிய, நஃப்ஸை முழுமைப்படுத்துவதற்கு எந்த விதமான ஆற்றலும் இருக்கவில்லை. அன்னார் வெறும் சரீஅத்தை மட்டும் போதிக்க வந்துள்ளார்கள் என முஸ்லிம்கள் எண்ணுகின்றார்கள். மேலும் தமது செயல்கள் மூலம் இதனை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் அல்லாஹ் இந்த உம்மத்திற்கு, இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என துஆ கற்பித்துள்ளான். ஆக, இந்த உம்மத் முந்தைய நபிமார்களின் வாரிசு இல்லையென்றால் இந்த அருள்களிலிருந்து இவர்களுக்கு பங்கு இல்லையென்றால் பிறகு இந்த துஆ ஏன் கற்றுத்தரப்பட்டுள்ளது. (ஆதாரம் : ஹகீகத்துல் வஹி)

பிறகு நபி (ஸல்) அவர்களுடைய சில அற்புதங்களை எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறை சந்திப்பின் மேன்மையில் சில சமயங்களில் மனிதனிடமிருந்து மனித சக்திக்கு அப்பாற்பட்ட சில வேலைகள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட அந்தஸ்தை அடைந்து விட்டால் இப்படிப்பட்ட அற்புதங்கள் நிகழ்கின்றன. அவை மனித சக்திகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனித சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் இருப்பதாக தெரியக்கூடிய இவை இறைவனது சக்திகளை உள்ளடக்கியதாக இருக்கும். உதாரணமாக, நமது தலைவராகிய, நபிமார்களின் தலைவராகிய ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் பத்ர் போரில் ஒரு கை பிடி மண்ணை காஃபிர்களுக்கு எதிராக வீசினார்கள். அந்த ஒரு கை பிடி மண்ணை எந்த துஆவின் காரணத்தாலும் அல்ல. மாறாக தனது ஆன்மீக ஆற்றலின் மூலம் வீசினார்கள். ஆனால் அந்த ஒரு பிடி மண் இறைவனது சக்தியை வெளிப்படுத்தியது. எதிரிகளின் படைகள் மீது எந்த அளவு அசாதாரணமான விளைவை ஏற்படுத்தியது என்றால், கண்களில் இதன் விளைவு ஏற்படாதவர் எவரும் இருக்கவில்லை. இயற்கைச் சட்டத்திற்கேற்றவாறு அந்த ஒரு பிடி மண்ணிற்குப் பின்னால் ஒரு புயல் வீசியது. ஆனால் அந்த ஒரு பிடி மண் தான் அந்த புயல் வருவதற்குக் காரணமாக இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் அனைவரும் குருடர்களைப் போன்று ஆகி விட்டனர். எப்படிப்பட்ட கஷ்டமான நிலை அவர்களுக்கு ஏற்பட்டதென்றால் சுயநினைவற்ற நிலையில் ஓட ஆரம்பித்தார்கள். இந்த அற்புதத்தைப் பற்றி தான் அல்லாஹ் சுட்டிக் காட்டுகின்றான். அதாவது, *நீர் எறிந்த போது நீர் எறியவில்லை. மாறாக அல்லாஹ்வே எறிந்தான். (8:18)* அந்த ஒரு கை பிடிக்குப் பின்னால் இறைவனது ஆற்றல் செயல்பட்டது. இறை ஆற்றல் மறைவிலிருந்து வேலை செய்தது. மனிதனது சக்தியால் இந்த செயல் செய்யப்பட்டதல்ல.

பிறகு கூறுகின்றார்கள். இதனைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது மற்றொரு அற்புதமாகிய சந்திரன் பிளத்தல் இருக்கின்றது. அதுவும் இதே இறைவனின் சக்தியால் வெளிப்பட்டதாகும். அதாவது சந்திரன் பிளந்த சம்பவம் இதனுடன் துஆ எதுவும் சேர்ந்திருக்கவில்லை. இறைவனது சக்தியினால் நிரம்பியிருந்த வெறும் விரலின் சைகையினால் அது நடைபெற்றது.

இதனைப் போன்று மேலும் பல அற்புதங்கள் உள்ளன. அவற்றை தனிப்பட்ட அதிகாரம் என்ற முறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காண்பித்தார்கள். அதனுடன் எந்த விதமான துஆவும் சேர்ந்திருக்கவில்லை.

- ❖ பலமுறை குவளையில் இருந்த சிறிதளவு தண்ணீரை தனது விரல்களை அந்த தண்ணீரினுள் நுழைத்ததன் மூலம் எந்த அளவு அதிகப்படுத்தினார்கள் என்றால் முழு படைகளும், ஒட்டகங்களும், குதிரைகளும், அந்தத் தண்ணீரைக் குடித்தன. பிறகும் கூட அந்தத் தண்ணீர் பழைய அளவிலேயே இருந்தது. இவ்வாறு அற்புதங்கள் நிகழ்த்தினார்கள்.
- ❖ பலமுறை இரண்டு நான்கு ரொட்டிகளின் மீது கை வைத்ததன் மூலம் பசியுடனும் பட்டினியுடனும் இருந்த ஆயிரக்கணக்கானோரின் வயிறுகளை நிரப்பினார்கள்.

- ❖ சில சமயங்களில் சிறிதளவு இருந்த பாலை தனது உதடுகள் மூலம் அருளை வழங்கி அதன் மூலம் ஒரு ஜமாஅத்துடைய வயிற்றை நிரப்பினார்கள்.
- ❖ சில சமயங்களில் உப்புத் தண்ணீர் உள்ள கிணற்றில் தனது வாயின் உமிழ்நீரை இட்டு மிகவும் இனிப்பானதாக ஆக்கினார்கள்.
- ❖ சில சமயங்களில் அதிகமாக காயமுற்றவர்களின் மீது தனது கையை வைத்து குணமாக்கினார்கள்.
- ❖ சில சமயங்களில் சண்டையின் காரணமாக வெளியில் வந்த கண்களை தனது கையின் அருளால் சரி செய்தார்கள். கண்களை மீண்டும் அதே இடத்தல் வைத்தார்கள். அது சரியானது.
- ❖ இதனைப் போன்று பல்வேறு வேலைகளை தனது சொந்த அதிகாரத்தின் அடிப்படையில் செய்தார்கள். அதனுடன் இறைவனது சக்தி மறைவாக இணைந்திருந்தது.

இதன் பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நிரந்தர விண்ணுலக வாழ்வைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஈஸா வானத்தில் உயிருடன் இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர். அல்லாஹ் இதனைப் பற்றி கூறுகின்றான். நிரந்தரமான விண்ணுலக வாழ்வு நபி (ஸல்) அவர்களுடையதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த விசயம் இறை வேதங்களிலிருந்து ஒன்றுபட்டு நிரூபணமானதாகும். அதாவது நபிமார்கள் மற்றும் இறை நேசர்கள் மரணித்த பிறகு மீண்டும் உயிர் பெறுகிறார்கள். அதாவது ஒருவகையான வாழ்வு அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அது மற்றவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது.

இதன் பக்கம் அந்த ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் என்னை கபரில் மையத்தாக விட்டு விடமாட்டான். உயிர் கொடுத்து தன்னளவில் உயர்த்திக் கொள்வான்.

இந்த விசயத்திற்கு விளக்கம் எழுதியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹதீஸின் உண்மையான மொழியாக்கம் இதுவாகும். அதாவது எனது கண்ணியம் இறைவன் மத்தியில் 40 நாட்கள் கபரில் வைப்பதை விட மேலானதாகும். நான் மேற்குறிப்பிட்டது இஸாலாயே அவ்ஹாம் உடைய மேற்கோளாகும். அதன் விளக்கத்தைக் கூறுகின்றார்கள். அதாவது அந்த ஹதீஸின் உண்மையான மொழிபெயர்ப்பு இதுவாகும். அதாவது எனது கண்ணியம் இறைவன் மத்தியில் 40 நாட்கள் கபரில் வைப்பதை விட மேலானதாகும். அதாவது நான் இந்த நாட்களுக்குள் உயிர் பெற்று வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவேன். இதனை பெருமானார் கூறுகின்றார்கள். ஆனால் எந்தவொரு முஸ்லிமும் அன்னார் வானத்தில் உடலுடன் இருப்பதாகக் கூறமாட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது தலைவர் (ஸல்) கபரிலிருந்து உயிர்பெறுவது, பிறகு வானத்தின் பால் உயர்த்தப்படுவதில் மஸீஹை உயர்த்தியதை விட அதிகப்படியாக என்ன உள்ளது என்பதைப் பாருங்கள். மாறாக உண்மை என்னவெனில் ஹஸ்ரத் மர்யத்தின் மகன் ஈஸாவின் வாழ்க்கை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய வாழ்க்கையை விட தரத்தில் குறைந்ததாகும். முந்தைய நல்லடியார்களின் ஒருமித்த சரியான கொள்கையின் படி, மேலும் மிஃராஜின் ஹதீஸும் இதற்கு சாட்சியம் பகர்கின்றது. அது இதுவாகும். நபிமார்கள் உவமையாக உடலுடன் பூமியில் உயிர் வாழ்கின்றனர். இது உவமையாகும். உண்மையில் இது இவ்வாறல்ல.

அவர்கள் கூறுகின்றார்கள்: உயிருடன் இருக்கின்றார்கள். சஹீதுகள் தொடர்பாக அவர்களது வாழ்வு முழுமையானதும் உறுதியானதும் ஆகும். சஹீதுகளைப் பற்றி அவர்கள் மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் உயிருடன் உள்ளார்கள் என வந்துள்ளது. ஆனால் நபிமார்கள் அதனை விட உயர்ந்தவர்கள் ஆவர்.

எல்லாரையும் விட முழுமையாக உறுதியாக சிறந்த வாழ்வு நமது தலைவர் (ஸல்) அவர்களுக்குரியதாகும். எனது உயிரும், எனது தந்தை தாயின் உயிரும் அன்னாருக்கு அர்ப்பணமாகட்டுமாக!

ஹஸ்ரத் மஸீஹ் இரண்டாவது வானத்தில் தனது தாயின் உடன்பிறந்தவரின் மகனான தனது வழிகாட்டியான ஹஸ்ரத் யஹ்யாவுடன் வசிக்கிறார்கள். ஆனால் நமது தலைவர் (ஸல்) அவர்கள் வானத்தில் எல்லாரையும் விட உயர்ந்த அந்தஸ்தில் உள்ளார்கள். அதனை விட உயர்வான அந்தஸ்து வேறெதுவும் இல்லை. இன்த்த ஸித்ரத்துல் முன்தஹா ஃபீ ரஃபீக்கில் அஃலா. உம்மத்துடைய ஸலாமும், தரூதும் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களுடைய சன்னதியை அடைந்து விடுகின்றன. அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி ஸய்யதினா முஹம்மதின் அக்ஸர மிம்மா ஸல்லய்த்த அலா அஹதின் மின் அன்பியாயிக்க வபாரிக் வஸல்லிம். நான் படித்த இவை இஸாலாயே அவ்ஹாம் உடைய மேற்கோளாகும்.

அடுத்து நாம் இறைவனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக பெற்றோம் என்ற விசயத்தை எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த வல்லமையுள்ள உண்மையான முழுமையான இறைவனுக்கு நமது ரூஹும், நமது ஒவ்வொரு அணுவும், அவனது இருப்பிற்கு ஸஜ்தா செய்கிறது. அவனது கையின் மூலம் ஒவ்வொரு ரூஹும் படைப்பினங்களின் ஒவ்வொரு அணுவும் தனது அனைத்து ஆற்றல்களுடன் வெளிப்பட்டது. அவனது இருப்பின் மூலம் ஒவ்வொன்றும் நிலைபெற்றிருக்கிறது. எந்தவொரு பொருளும் அவனது அறிவை விட்டும் அவனது ஆற்றலை விட்டும் அவனது படைப்பிலிருந்தும் வெளியில் இல்லை. ஆயிரக்கணக்கான தரூதும், ஸலாமும் அந்த தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டுமாக! அவர்கள் மூலமாகத்தான் நாம் உயிருள்ள இறைவனைப் பெற்றோம். அவனே உரையாடி தனது இருப்பிற்கு சாட்சி பகர்கின்றான். அவனே வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்தி தனது பழைய மற்றும் முழுமையான ஆற்றல்களையும் சக்திகளையும் நமக்கு பிரகாசமான முகமாக காண்பிக்கின்றான். ஆக நாம் இறைவனை காட்டித்தந்த அந்த ரஸூலை பெற்றுள்ளோம். அந்த இறைவன் தனது முழுமையான ஆற்றல்கள் மூலம் ஒவ்வொரு பொருளையும் படைத்துள்ளான். அவனது வல்லமை எவ்வளவு பெரிய மகத்துவத்தை தன்னுள் வைத்துள்ளது. அவன் இல்லாமல் எந்தவொரு பொருளும் உருவம் பெறவில்லை. அவனது உதவியில்லாமல் எந்தவொரு பொருளும் நிலைபெற்றிருக்க முடியாது. அவன் நமது உணமையான இறைவனும் எண்ணற்ற அருள்களைக் கொண்டவனும், எண்ணற்ற அழகை உடையவனும், எண்ணற்ற கருணையாளனும் ஆவான். அவனைத் தவிர வேறெந்த இறைவனும் இல்லை.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு என்னவெல்லாம் கிடைத்துள்ளதோ அவை யாவும் நபி (ஸல்) அவர்கள் மூலம் தான் கிடைத்தது. நான் நபி (ஸல்) அவர்களுடைய அந்தஸ்தை தாழ்த்துகின்றேன் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். எனக்கு கிடைத்ததெல்லாம் அன்னாரிடமிருந்து கிடைத்ததாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது மினன்னுர் ரஹ்மான் உடையதாகும். இது அரபி வாசகம் ஆகும். அதன் மொழியாக்கத்தை வாசிக்கின்றேன். அதாவது எனது இந்த வெற்றி எனது இறைவன் புறமிருந்து கிடைத்ததாகும். நான் அவனைப் புகழ்கின்றேன். அரபி நபி (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுகின்றேன். அவர்களிடமிருந்து அனைத்து அருள்களும் இறங்கின. அவர்களிடமிருந்தே இந்த பாவும் ஊடும் கிடைத்தன. அவர்கள் தான் எனக்காக வேரையும் கிளைகளையும் தயார் செய்தார்கள். அவர்களே எனது விதையையும் வயலையும் வளர்த்தார்கள். அவர்கள் வளர்ப்பவர்கள்; அனைவரையும் விட சிறந்த வளர்ப்பவர்கள் ஆவார்கள்.

பிறகு எனக்கு கிடைத்ததெல்லாம் நபி (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைத்தது என்பதை மேலும் விளக்கியவாறு கூறுகின்றார்கள்: நான் அவன் மீதே சத்தியம் செய்து கூறுகின்றேன். அதாவது அல்லாஹ், ஹஸ்ரத் இப்ராஹீமுடன் சந்திக்கவும், பேசவும் செய்திருக்கின்றான். அதேபோன்று ஹஸ்ரத் இஸ்ஹாக்குடனும், ஹஸ்ரத் இஸ்மாயீலுடனும், யாகூபுடனும், யூசுஃப்புடனும், மூஸாவுடனும், மர்யமின் மகன் ஈஸாவுடனும், அனைவரையும் விட நமது நபி (ஸல்) அவர்களுடனும் எவ்வாறு உரையாடினான் என்றால் அன்னார் மீது எல்லாரையும் விட

அதிகமாக பிரகாசத்தையும் தூய வஹியையும் இறக்கினான். மேலும் இவ்வாறே எனக்கு அவனது சந்திப்பது மற்றும் அவனுடன் உரையாடுவதற்கான நல்வாய்ப்பினை வழங்கினான். ஆனால் இந்த நல்வாய்ப்பு நபி (ஸல்) அவர்களை பின்பற்றியதனால் மட்டுமே கிடைத்ததாகும். ஒருவேளை நான் நபி (ஸல்) அவர்களது உம்மத்தைச் சேர்ந்தவனாக இருக்கவில்லை யென்றால் அன்னாரைப் பின்பற்றவில்லையென்றால் உலகிலுள்ள அனைத்து மலைகளின் அளவுக்கு எனது செயல்கள் இருந்தாலும், நான் ஒருபோதும் இறைவனை சந்திப்பது மற்றும் பேசுவதன் நல்வாய்ப்பினை பெற்றிருக்கமாட்டேன். அதாவது இறைவன் அன்னாருடன் பேசுவது, சந்திப்பது போன்ற நிலை ஒருபோதும் கிடைக்கப் பெற்றிருக்காது. ஏனென்றால் தற்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர அனைத்து நுபுவ்வத்தும் அடைக்கப்பட்டு விட்டன. சரீஅத்துடைய நபி எவரும் வரமாட்டார். சரீஅத் இல்லாமல் நபி வர முடியும். ஆனால் அவர் முதலில் உம்மத்தியாக இருக்க வேண்டும். (ஆதாரம் : தஜல்லியாத்தே இலாஹிய்யா)

**பிறகு அல்லாஹ்வைப் புகழ்ந்தவாறு நபி (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதைப் பற்றி கூறுகின்றார்கள்:**

இறைவா! உனக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். உன்னை அடையாளம் காணுவதற்கான வழியை எங்களுக்கு காட்டினாய். உனது தூய வேதத்தை இறக்கி சிந்தனை மற்றும் அறிவின் தவறுகளிலிருந்தும் பிழைகளிலிருந்தும் காப்பாற்றினாய். தரூதும் ஸலாமும் ரஸூல்மார்களின் தலைவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பம் மற்றும் அவர்களது நபிமார்கள் மீதும் உண்டாகட்டுமாக! அவர்கள் மூலமாக இறைவன் தொலைந்து போன உலகை நேரான வழியில் நடத்தினான். அந்த சீர்திருத்தவாதி நன்மை பயக்கும் மனிதர், மறைந்து போன மக்களை மீண்டும் நேரான வழியில் கொண்டு வந்தார்கள். அந்த கருணையாளர் மக்களை சிலைகளிலிருந்தும் தீமைகளிலிருந்தும் காப்பாற்றினார்கள். அவர் ஒளி ஆவார். ஒளி பரப்பக்கூடியவர். அவர் ஏகத்துவத்தின் பிரகாசத்தை உலகில் பரப்பினார். அந்த மருத்துவர் மற்றும் உலகின் சிகிச்சையாளர் சீர்கெட்டுப்போன உள்ளங்களை நேரான வழியில் நிலைநிறுத்தினார். அவர் கருணையாளர் ஆவார். அற்புதத்தின் அடையாளம் ஆவார். அவர் மரணித்தவர்களுக்கு வாழ்விற்கான நீர் கொடுத்தார். அவர் ரஹீம், பரிவு காட்டுபவர் ஆவார். அவர் உம்மத்திற்காக துக்கங்களை சகித்துக் கொண்டார். வேதனையைப் பொறுத்துக் கொண்டார். அவர் வீரமானவரும் தைரியசாலியும் ஆவார். அவர் நம்மை மரணத்தின் பிடியிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அவர் இரக்க குணமுடையவரும் தன்னலமற்றவரும் ஆவார். தனது இறைவன் முன் தலை குனிந்தார். தனது இருப்பை மண்ணோடு மண்ணாக்கினார்.

தவ்ஹீதின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவர். இறைவனின் மகிமையைத் தவிர வேறெதர்க்கும் அஞ்சியதில்லை. அவனைத் தவிர மற்ற அனைத்தையும் ஒரு பொருட்டாகக் கருதியதில்லை. படிப்பற்றவராக இருந்தும் கூட இறை ஆற்றலின் அற்புதத்தினால் இறைஞானத்தில் அனைவரையும் விட முந்தி விட்டார். மேலும் பிற சமுதாயங்கள் அனைத்திலும் காணப்பட்ட தவறுகளையும் பிழைகளையும் அவற்றிற்கு சுட்டிக் காட்டினார். அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க நபி (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவது ஒரு மூஃமினான முஸ்லிமுக்கு கடமையாகும். அது இல்லாமல் ஒரு மூஃமினுக்கு நபி (ஸல்) அவர்கள் மீது இருக்க வேண்டிய நேசத்தின் தரம் முழுமை அடையாது. முழுமை அடையவும் முடியாது. தரூது இல்லாமல் எந்தவொரு துஆவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தரத்தை அடையாது. அது ஏற்றுக்கொள்ளப்படாது. நாம் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தரூது ஓதுவதன் அசல் நோக்கம் நபி (ஸல்) அவர்களுடன் நேசம் கொள்ள வேண்டும் என்பதாகும். அந்த நேசம் அனைத்தை விடவும் மேலோங்கி இருக்க வேண்டும்.

தரூது சரீஃப் ஓதுவதன் நோக்கத்தை கூறியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு கூட்டத்தில் இதுபற்றி கேட்கப்பட்ட போது புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள். இறைவன் தனது முழு அருள்களையும் தனது நபி கரீம் (ஸல்) அவர்கள் மீது இறக்க வேண்டும் (என்ற நோக்கத்திற்காக தரூது ஓத வேண்டும்). மேலும் அன்னாரை அனைத்து உலகங்களுக்கும் அருள்களின் ஊற்றாக ஆக்க வேண்டும். அன்னாருடைய கண்ணியத்தை மேன்மையை இந்த உலகிலும் மறுவுலகிலும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக தரூது ஓத வேண்டும். இந்த துஆவை முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். ஒருவர் தனது

கஷ்டத்தின் போது எவ்வாறு முழு ஈடுபாட்டுடன் செய்வாரோ அவ்வாறு செய்ய வேண்டும். எவ்வாறு தமக்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து துஆ செய்வீர்களோ அவ்வாறு உள்ளத்தின் ஆழத்திலிருந்து துஆ செய்ய வேண்டும். இன்னும் அதனை விட அதிகமாக உருக்கத்துடன் அழுகையுடனும் இந்த துஆவை செய்ய வேண்டும். இதில் தனக்கென்று எதனையும் வைக்கக் கூடாது. அதாவது மனிதன் தனக்காக செய்யக்கூடிய துஆக்களில் எந்த அளவு அழுகையும், மன்றாடலும் இருக்குமோ அதனை விட அதிகமாக இந்த துஆக்கள் அழுகையும், உருக்கமும் உடையதாக இருக்க வேண்டும். தனக்கென்று எந்த பங்கையும் வைக்கக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது தரூது சரீஃபின் மூலம் எனக்கு இந்த இந்த நன்மை கிடைக்கும் என்றோ இந்த இந்த தர்ஜா கிடைக்கும் என்றோ எந்த உள்நோக்கத்தையும் வைக்கக் கூடாது. மாறாக தூய்மையான நோக்கம் தான் இருக்க வேண்டும். அதாவது இறைவனுடைய முழுமையான அருள்கள் ரஸுல் (ஸல்) அவர்கள் மீது இறங்க வேண்டும். அதன் மேன்மை இவ்வுலகிலும் மறுமையிலும் ஒளிர வேண்டும். இந்த பொருளிலேயே உறுதியாக செயல்பட வேண்டும். இரவு பகல் என தொடர்ந்து முழுமையான கவனம் வேண்டும். எந்த அளவுக்கு என்றால் உள்ளத்தில் இதனை விட வேறெந்த எண்ணமும் உயர்வானதாக இருக்கக் கூடாது. இதுதான் ரஸுலின் மீது கொள்ளும் நேசமாகும்.

பிறகு அன்னார் ஒரு கடிதத்தில் கூறுகின்றார்கள்: இதனை பாஸித் அலி சாஹிபிற்கு எழுதினார்கள். ஆனால் பின்னர் அவர் (ஜமாஅத்திலிருந்து) திரும்பி விட்டார். எவ்வாறாயினும் கூறுகின்றார்கள்:

தாங்கள் தரூது சரீஃபை ஓதுவதில் மிக அதிக கவனம் செலுத்துங்கள. ஒருவர் தனது அன்பிற்குரியவருக்காக உண்மையிலேயே எவ்வாறு அருளை வேண்டுவாரோ அவ்வாறு செய்ய வேண்டும். இதனைப் போன்று ஆர்வத்துடனும் தூய்மையுடனும் நபி (ஸல்) அவர்ளுக்காக அருள்களை வேண்டுங்கள். மிகவும் உருக்கத்துடன் வேண்டுங்கள். அந்த உருக்கம் மற்றும் துஆவில் எந்த விதமான பாசாங்கும் இருக்கக் கூடாது. மேலும் நபி (ஸல்) அவர்களுடன் உண்மையான நட்பும் நேசமும் இருக்க வேண்டும். உண்மையில் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தரூது சரீஃபிலுள்ள அந்த அருள்களை நபி (ஸல்) அவர்களுக்காக வேண்ட வேண்டும். தனிப்பட்ட நேசத்திற்கான அடையாளம் இதுவாகும். அதாவது மனிதன் ஒருபோதும் சோர்வடையக் கூடாது. ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. அதில் தனது சொந்த நோக்கங்கள் சேர்ந்திருக்கக் கூடாது. இந்த எண்ணத்திற்காக அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறைவனுடைய அருள்கள் இறங்க வேண்டும் என்பதற்காக மட்டுமே ஓத வேண்டும்.

ஒரு கூட்டத்தில் அன்னார் கூறினார்கள்: நான் பார்க்கின்றேன். தரூது சரீஃப் காரணமாக அல்லாஹ்வுடைய அருள்கள் வியக்கத்தக்க நோக்கத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை செல்கின்றன. அங்கு சென்ற பிறகு நபி (ஸல்) அவர்களுடைய உள்ளத்தில் அது பதிந்து விடுகின்றது. பிறகு அங்கிருந்து வெளியேறி எல்லையில்லா ஓடைகளாக அவை ஆகி விடுகின்றன. உரிமையாளர் ஒவ்வொருவருக்கும் தகுதிக்கேற்ப அதன் பங்கு கிடைக்கின்றன. நிச்சயமாக அவர்களின் ஊடகம் இல்லாமல் எந்த அருளும் மற்றவரை சென்றடையவே முடியாது.

தரூது சரீஃப் என்பது என்ன? ரஸுல் (ஸல்) அவர்களுடைய அந்த அரியணையை உலுக்குவதாகும். அதிலிருந்து ஒளியின் ஓடைகள் தோன்றுகின்றன. எவர் அல்லாஹ்வுடைய அருளையும், நன்மையையும் பெற விரும்புவாரோ அவர் அதிகமாக தரூது சரீஃப் ஓத வேண்டும். இதன் மூலம் அந்த அருளில் செயல்பாடு உண்டாக வேண்டும்.

பிறகு தமது ஒரு கடிதத்தில் கூறுகின்றார்கள்: எண்ணிக்கை தொடர்பாக எவ்வளவு ஓத வேண்டும். சில இடங்களில் எண்ணிக்கையைக் கூறியுள்ளார்கள். இங்கு இவ்வாறு கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளியான அந்த தரூது சரீஃப் தான் மிகச் சிறந்தது. அது இதுவாகும். ஒன்று எந்த தரூது சரீஃபை ஓத வேண்டும். இரண்டாவது எவ்வளவு ஓத வேண்டும் என்பதாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருளுக்குரிய நாவிலிருந்து வெளிப்பட்ட அந்த தரூது சரீஃப் தான் மிகச் சிறந்தது. அது இதுவாகும்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அனைத்து வகையான தரூது சரீஃபை விடவும் இந்த தரூது சரீஃப் தான் மிகவும் அருளுக்குரியதாகும். இதுதான் இந்த எளியவன் தொடர்ந்து ஓதி வரும் தரூது ஆகும். எந்த வகையான எண்ணிக்கையையும் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. தூய்மை, நேசம் மற்றும் உருக்கத்துடன் ஓத வேண்டும். அழுகை மற்றும் தன்னை மறத்தல், தாக்கத்தின் நிலை ஏற்படும் வரை மேலும் உள்ளத்தில் தெளிவும் ஆர்வமும் ஏற்படும் வரை ஓத வேண்டும்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதில் அல்லது இந்தக் கட்டளையில் என்ன ஞானம் இருக்கிறது என்பதைப் பற்றி கூறியவாறு கூறுகின்றார்கள்:

நிச்சயமாக நபி (ஸல்) அவர்களுக்கு வேறொருவரது துஆவின் அவசியம் இல்லை. ஆனால் இதில் மிகவும் நுட்பமான இரகசியம் ஒன்று உள்ளது. மிகவும் ஆழமான இரகசியம் ஆகும். ஒருவர் சுய விருப்பத்தின் காரணமாக பிறருக்கு அருளை வேண்டுகின்றார் என்றால், தனிப்பட்ட நேசம் கொண்டதன் காரணாக அந்த மனிதரின் இருப்பில் ஒரு பங்காகி விடுகின்றார். அதாவது எவரிடமாவது தனிப்பட்ட அன்பு இருந்து அவருக்கு அருளை வேண்டினால் அந்த தனிப்பட்ட அன்பின் காரணமாக அவரது அங்கமாக ஆகி விடுகின்றார். ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் மீது இறைவனுடைய அருள் எல்லையற்று உள்ளது. அதனால் தரூது ஓதக் கூடியவர்களுக்கு தனிப்பட்ட நேசம் கொண்டவாறு அருளை வேண்டக்கூடியவருக்கு எல்லையற்ற அருளிலிருந்து அவரது உணர்வுக்கேற்ப கிடைக்கப் பெறும். ஆனால் ஆன்மீக எழுச்சி மற்றும் தனிப்பட்ட அன்பு இல்லாமல் இந்த அருள் மிகவும் குறைவாகத்தான் கிடைக்கிறது. ஆக இவை தான் தரூது ஓதக்கூடிய வழிமுறைகள் ஆகும்.

தற்போது நான் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய அரபி கவிதைகளை வாசிக்கின்றேன். இதிலிருந்து நபி (ஸல்) அவர்களுடைய மேன்மை, அந்தஸ்து தூய்மைப்படுத்தும் ஆற்றல் மற்றும் பெருமானார் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்ட நேசம் பற்றி தெரிய வரும். இந்த அளவு நேசம் கொண்ட பிறகு அவர்களுடன் சமுதாயம் நடந்து கொண்ட முறையைக் கூறுகின்றார்கள். நான் படித்த அனைத்திலிருந்தும் நேசத்தை தவிர வேறெதுவும் வெளிப்படுவதில்லை. இவ்வாறிருந்தும் கூட முஸ்லிம்களின் பெரும்பான்மை அவர்களுக்கு எதிராக உள்ளது. இந்த கவிதைகளில் சிலவற்றைக் கூறுகின்றார்கள்.

❖ சந்தேகமின்றி ஹஸ்ரத் நபி (ஸல்) படைப்பினங்களில் மிகவும் சிறந்தவர்களாவார்கள். கண்ணியத்திற்குரியவர்களில் தூயவரும், தலைவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார்கள்.

❖ இறைவன் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) இறைவனுடைய உதவியாளர் ஆவார்கள். அன்னார் மூலமாகத்தான் இறை சன்னிதியை அடைய முடியும்.

❖ சந்தேகமின்றி நான் நீங்கள் உயிரூட்டியதால் தான் உயிர் பெற்றேன். சுப்ஹானல்லாஹ் என்னவொரு கண்ணியம், எவ்வளவு அழகாக என்னை உயிர்பெறச் செய்துள்ளார்கள்.

❖ எனது தலைவரே! நான் உங்களது வாசலில் அநீதியிழைக்கப் பட்டவனாகவும், யாசிப்பவனாகவும் வந்துள்ளேன். சமுதாயம் என்னை காஃபிர் எனக்கூறி கஷ்டப்படுத்தியது.

❖ எனது தலைவரே! தாங்கள் என் மீது கருணை மற்றும் பரிவு காட்டுங்கள். நான் எளிமையான அடியான் ஆவேன்.

❖ எனது உடல் எழுச்சியின் ஊக்கத்தினால் உம்மை நோக்கி பறந்து வர விரும்புகிறது. அந்தோ! எனக்கு பறக்கும் சக்தி இருக்கக் கூடாதா?

இந்த சில உதாரணங்களை நான் எடுத்துரைத்தேன். இதில் அன்னாரது அன்பு, நேசம் மற்றும் சமுதாயம் இழைக்கும் கஷ்டமும் இடையில் வந்து விட்டது. அல்லாஹ் நமக்கு உண்மையான முறையில் இந்த மேன்மையும் அந்த அந்தஸ்தையும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பளிப்பானாக!

இறுதியாக மீண்டும் நான் முஹம்மதிய்ய உம்மத்திற்காக துஆவுக்கான விண்ணப்பம் வைக்க நாடுகின்றேன். நம்மை இவர்கள் என்ன வேண்டுமானாலும் கூறட்டும்! புரிந்து கொள்ளட்டும்! பெரும்பான்மையினர் அறியாமையின் காரணமாகவும் ஆலிம்களின் அச்சத்தினாலும் நமது ஜமாஅத்தை எதிர்க்கின்றனர். இருந்தபோதிலும் இவர்கள் தம்மை நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைச் சார்ந்தவர்கள் என்று கூறுகின்றார்கள். இதனால் இன்று இவர்களின் பரிதாப நிலையை எண்ணி நாம் துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ் இவர்களை இந்த நிலைமைகளிலிருந்து வெளியேற்றுவானாக! பெரும்பான்மையான முஸ்லிம் நாடுகள் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளது. உள்நாட்டு குழப்பங்களும் சண்டைகளும் அழிவின் விளிம்பில் கொண்டு நிறுத்தி விட்டது. அல்லாஹ் கருணை காட்டுவானாக! இவர்கள் இதிலிருந்து மீள வேண்டும். இவர்களது அரசியல் வாதிகளிடமும் தலைவர்களிடமும் இறையச்சம் இல்லை. அல்லாஹ் இறையச்சத்தை இவர்களிடம் ஏற்படுத்துவானாக! மேலும் இவர்களது பொதுமக்களும் தவறான தலைவர்களுக்குப் பின்னால் சென்று தமது நாட்டுப்பற்றை தவறான கோணத்தில் வெளிப்படுத்தி வீணாக்குகின்றனர். நாட்டிற்கு சேதம் விளைவிக்கின்றனர். அல்லாஹ் இவர்களுக்கும் நீதியுடன் நாட்டுப்பற்றை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிப்பானாக! இல்லை என்றால் மிகவும் பயரங்கரமான நிலைமை ஏற்படவிருக்கிறது. அதுநமது கண் முன் தெரிகிறது. இதே நிலை நீடித்தால் கொஞ்சம் இருக்கக் கூடிய சுதந்திரமும் பறிபோய் முழுமையான முறையில் சில நாடுகளின் ஆதிக்கம் ஏற்பட்டு விடக்கூடாது. அதிக அளவு துஆ செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

இஸ்லாத்தின் பெயரில் தவறான அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவை அல்லாஹ் மற்றும் நபி (ஸல்) அவர்களது பெயரை இழிவுபடுத்தக்கூடியதாக உள்ளது. அல்லாஹ் இதிலிருந்தும் விரைவாக உம்மத்தைக் காப்பாற்றுவானாக! உலகத்தை காப்பாற்றுவானாக! இவை உலகத்திற்கும் ஆபத்தாகி விட்டது. ஏனென்றால் இந்த மக்கள் இஸ்லாத்தின் அழகிய முகத்தை களங்கப்படுத்த முயற்சி செய்கின்றனர்.

மேலும் நமது ஜமாஅத்தின் முயற்சிகள் இஸ்லாத்தின் அழகிய போதனையை வெளிப்படுத்துவதற்காக இருக்கும் போது நாம் அதற்காக முயலும் போது அதற்கு முன்பாக இவர்களது வெறுக்கத்தக்க முயற்சிகள் வந்து நிற்கின்றன. இஸ்லாத்தின் எதிரிகள் செய்கின்ற முயற்சிகளும் வந்து நிற்கின்றன. அல்லாஹ் விரைவாக இவர்களிடமிருந்து நம்மை காப்பாற்றுவானாக! அல்லாஹ் நம்மையும் ரஸூலின் நேசத்தின் முன்னேறிச் செல்லக் கூடியவர்களாக ஆக்குவானாக! நமது கடமைகளை சிறந்த முறையில் செய்வதற்கு வாய்ப்பளிப்பானாக!

தொழுகைகளுக்குப் பிறகு இரண்டு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். ஒன்று ஹாஸிர். இங்கு கொண்டு வரப்பட்டுள்ள ஜனாஸாவாகும். இது கண்ணியத்திற்குரிய இஹ்ஸானுல்லாஹ் சாஹிப் உடைய ஜனாஸாவாகும். இவர் கராச்சியைச் சேர்ந்தவர். இன்றைய நாட்களில் U.K.-வில் தான் இருந்தார்கள். ஜனவரி 19ம் தேதி தமது 57 வயதில் புற்றுநோயினால் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி அஹ்மது தீன் சாஹிப் உடைய பேரன் ஆவார்கள். தொழுகையை முறையாக பேணக்கூடிய, தொண்டாற்றக் கூடிய, இரக்கமுள்ள அனுதாபம் நிறைந்த பொறுமை மற்றும் நன்றி செலுத்தக் கூடியவராவார். உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முன்னுரிமை வழங்கக்கூடியவர் மிகச்சிறந்த நல்லொழுக்கம் கொண்டவரும் நல்ல தூய மனிதர் ஆவார்.

பெற்றோர்களுக்கு அளவற்ற சேவை செய்யக்கூடியவர் ஆவார். மனைவி, பிள்ளைகளிடம் எப்போதும் அன்புடன் பழகி வந்தார். எப்போது ஏதாவது கடினம் காட்டினால் உடனே அதனை உணர்ந்தவாறு அதனை போக்குவதற்கு முயற்சி செய்வார். அல்லாஹ் இவர் மீது கருணை காட்டுவானாக! இவரது பிள்ளைகள் பாகிஸ்தானில் தான் உள்ளன. அவர்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக! அவர்களுக்கு அவனே பாதுகாவலனாகட்டுமாக!

இவர் கடந்த 10, 12 வருடங்களாக இங்கு U.K.-வில் தான் தங்கி இருந்தார். Asylum -க்காகத் தான் இங்கு வந்திருந்தார். 3,4 வருடங்களுக்கு முன்பே இவர்களது வழக்கு பாஸ் ஆனது. மேலும் இங்கு ஜமாஅத் தொண்டிற்காக சொத்துப் பிரிவில் மஸ்ஜிது கட்டுவதன் தொடர்பாக இவருக்கு தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்து வந்தது. வருத்தத்தால் வாடுபவர்களில் இவரது மனைவியைத் தவிர 6 மகள்களும் 1 மகனும் உள்ளனர். நான் கூறியது போன்று அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பாதுகாவனாக இருப்பானாக!

இரண்டாவது ஜனாஸா காயிப் ஜனாஸாவாகும். அலா நஜ்மி சாஹிப் உடையதாகும். இவர் இக்ரிமா நஜ்மி சாஹிப் உடைய அண்ணன் ஆவார். 10 வருடங்களுக்கு முன்பு இருதய புற்றுநோய் உண்டானது. அதன் பிறகு மருத்துவர்கள் சில மாதங்கள் தான் வாழ்வார் என்றார்கள். ஆனால் இறை அருளால் 10 வருடங்கள் வரை உயிருடன் இருந்தார்கள். டிசம்பர் 9ம் தேதி 2012 ம் ஆண்டு தனது மரணம் நிகழ்ந்த நாளில் வீட்டில் தனியாகத்தான் இருந்தார்கள். அவரது மூத்த மகள் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டிற்குத் திரும்பியதும் அவளிடம் என்னை கொஞ்சம் தனியாக விடுங்கள். நான் தொழ வேண்டும் என்று கூறியுள்ளார். சிறிது நேரத்திற்குப் பிறகு இவரது மகள் அறைக்குள் சென்று பார்த்த போது தொழுகையை முடித்து விட்டு படுக்கையில் அமர்ந்த பிறகு இறைவனிடம் சென்றடைந்திருந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூம் நல்ல தூய மனிதர் ஆக இருந்தார். பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவராக இருந்தார். கிலாஃபத்திற்காக அர்ப்பணமானவர். ஜமாஅத் பணிகளில் முன்னால் வந்து பங்குபெறக் கூடியவர் ஆவார். பல்வேறு அரபு சகோதரர்களுடன் இணைந்து அரபு நிகழ்ச்சி அல்ஹிவாருல் முபாஷிரை முதன்முறையாக எழுத்து வடிவில் கொண்டு வரும் பணியை செய்து முடித்தார். இதனைப் போன்று அரபி டெஸ்க் சார்பாக ஜுமுஆ குத்பா மொழியாக்கம் மற்றும் பல்வேறு புத்தகங்களின் மொழியாக்கத்தை பிழை திருத்தம் செய்தல் போன்ற பணிகளை செய்து வந்தார். அவர் மூஸி ஆவார். இவரது உறவினர்களில் பெற்றோர்கள், மனைவி 2 மகள்கள மற்றும் 1 மகன் உள்ளனர். ஒரே பையன். எனது கிலாஃபத் தேர்ந்தெடுக்கும் நாளில் அதாவது ஐந்தாவது கிலாஃபத்திற்கான தேர்தல் நடந்த நாளில் பிறந்ததால் அவனுக்கு மஸ்ரூர் என்று பெயர் வைத்துள்ளார்கள்.

இவரைப் பற்றி ஹானி தாஹிர் சாஹிப் கூறுகின்றார்கள். மர்ஹூம், கண்ணியத்திற்குரிய முஸ்தஃபா சாபித் சாஹிபுடன் அன்பு, பரிசுத்தம், நற்பாக்கியம் மற்றும் நோயில் பொறுமை, குறை கூறாத தன்னடக்கம் போன்றவற்றில் ஒன்றுபோல் இருப்பவர் ஆவார். அற்புதம் என்னவென்றால், இருவரது நோய் எப்படிப்பட்டதென்றால் இதில் மனிதன் நீண்ட நாள் வாழமாட்டான். எந்த வேலையும் செய்ய முடியாது. ஆனால் இவர்கள் இருவரும் நோயுடன் மிக நீண்ட காலம் போட்டியிட்டுள்ளனர். பல பணிகளை செய்துள்ளனர். இது மிகவும் சரியான விசயமாகும். மர்ஹூம் அலா சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்கள் மற்றும் எனது ஜுமுஆ குத்பா போன்றவைகளின் மொழியாக்கத்தை பிழை திருத்துதல், சரிபார்த்தல் போன்ற பணியைச் செய்து வந்தார். மிகவும் அதிகமாக நோய்க்கு ஆளானபோதிலும் பலவீனத்திலும் தொடர்ந்து இதனை செய்து வந்துள்ளார்.

அவரிடமிருந்து கிடைத்த கடைசி கடிதத்தில் நான் U.K.-வின் ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர்கள் மத்தியில் உரை ஆற்றினேன். அதன் மொழியாக்கத்தின் செக்கிங் தொடர்பாக இருந்தது. மேலும் தனக்கு அல்லாஹ் இந்த அளவு இதற்கு வாய்ப்பினை தருகின்றான் என நன்றி செலுத்தி வந்தார்கள்.

தாஹிர் நதீம் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஆலா நஜ்மி உடைய சிறந்த பண்பு இதுவாகும். அதாவது நன்மை செய்வதில் வேகம் காட்டுவார்கள. அவர்களுக்கு தனது வாழ்வின் காலம் கொஞ்சம் தான் உள்ளது என்பது தெரியும். அதனால் எஞ்சியுள்ள நாள்களை நல்ல அமல்கள் மூலம் நிரப்ப விரும்பினார்கள்.

ஒவ்வொரு குத்பாவுடைய மொழியாக்கம் அவருக்கு அனுப்பப்படும். ஏதாவது ஒரு காரணத்தினால் குத்பா அனுப்பப்படவில்லை என்றால் இந்த வாரம் எனக்கு ஏன் குத்பா அனுப்பப்படவில்லை என இமெயிலில் புகார் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். நோயின் தாக்கம் கண் பார்வை மீது இருந்தும் கூட இந்தப் பணிகளை முறையாக செய்து வந்தார்.

பலமுறை அரபி டெஸ்கிற்கு இமெயில் செய்து என்னுடைய உடல்நிலை மிகவும் மோசமானதாக உள்ளது. எனவே ஏதாவது ஜமாஅத் பணிகள் இருந்தால் உடனே அனுப்பவும். அதாவது உடல்நிலை சரி செய்வதற்கு இது ஒரு மருந்தாகும். சில சமயங்களில் நான் நோயைப் பற்றி எழுதுவது துஆவுக்காக மட்டும் தான். இதற்கு எனக்கு வேலை தருவதை நிறுத்துங்கள் என்று அர்த்தம் கிடையாது என எழுதுவார்கள்.

மூஃமின் தாஹிர் கூறுகின்றார்கள்: மர்ஹூமுடன் எனக்கு ஒரு ஆழமான தொடர்பு இருந்தது. இறை நியதியில் திருப்தி, அல்லாஹ்வின் மீது அளவற்ற நம்பிக்கை, கிலாஃபத்துடன் அதிகமான அன்பு மற்றும் விசுவாசம், ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதல், அரபி டெஸ்க் உடைய அறிவுசார்ந்த பணிகளில் சோர்வில்லாமல் முயற்சிப்பவர் ஆவார். விருந்து உபசரிப்பு இவரது குறிப்பான பணியாகும். இவர் தமது பிள்ளைகளுக்கு ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் அதிகமான அன்பை ஏற்படுத்தியுள்ளார். அவர்களுக்கு உருது கற்றுக் கொடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். இவரது மூத்த மகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கவிதைகளை மனனம் செய்துள்ளார். ஒவ்வொரு மாநாட்டிற்கும் வருவதற்கு முயற்சி செய்வார்கள். புற்றுநோய் என்ற கஷ்டம் தரக்கூடிய நோய்க்கு ஆட்பட்டிருந்தும் ஏனைய விருந்தினர்களுடன் தரையில் படுத்து உறங்குவார்கள்.

அவர் கிலாஃபத்திற்கு மிகவும் தன்னடக்கத்துடனும் அமைதியுடனும் தனது வாழ்வின் இறுதி நொடிப்பொழுது வரை சோர்வில்லாமல் பணியாற்றக் கூடியவர்களில் ஒருவராவார். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்திக் கொண்டே செல்வானாக! நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில் தனது பிள்ளைகளைப் பற்றி பேசப்படும் போதெல்லாம் அல்லாஹ் எனது பிள்ளைகளை வீணாக்கமாட்டான் எனக் கூறி வந்தார். அல்லாஹ் அவரது பிள்ளைகள் தொடர்பாக அவரது நல்ல விருப்பங்களையும் துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக! மேலும் அவனே அவர்களுக்கு பாதுகாவலனாக இருப்பானாக! அல்லாஹ் அரபு உலகில் இவரைப் போன்றும், இன்னும் இவரை விட அதிகமாக கிலாஃபத்திற்கு உதவியாளர்களை சுல்தானே நஸீரை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **01.02.2013**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456